1987 மே 5]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் குழந்தைகளுக்கு ஆரம்பப்பள்ளிக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற கட்டம் அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற ஒன்றாக இருக்கிற காரணத்தால் தரமான கல்வியைப் போதிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதிலே இருக்கிற குறை பாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அதை மாற்றுவதற்காகத்தான் திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் குழு அமைத்து அதற்குரிய பரிகாரத்தைத் தர வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. Accountability of the teachers என்று சொல்கிற அளவுக்கு மாணவர்களுக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் ஆசிரியர்களின் கடப்பாடு என்ன என்பதைக் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே 1988-89-ஆம் ஆண்டிலிருந்து இம்முறையை நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து கோர்ட்டுகள்

596—(* வினா எண் 5013) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மீண்டும் பஞ்சாயத்து கோர்ட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற நீதி விரைவாகவும், எளிதாகவும் குறிப்பாக அலைச்சல் இல்லாமல் அருகிலேயே கிடைக்கின்ற வகையில் இருக்க வேண்டுமென்றுதான் இதுவரை மாவட்ட அளவில் இருந்த நீதிமன்றங்களையெல்லாம்கூட நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு வட்டார அளவுக்குக் கொண்டு வந்து அதன் காரணமாக ஏழை எளிய மக்களுக்கு நீதி எளிதாகக் கிடைக்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது. இருந்தாலும், சிறிய சிறிய பிரச்சினைகளுக்காக இப்படிப்பட்ட நீதிமன்றங்களுக்குப் போய் வருகிற சூழ்நிலை

[1987 மே 5

இருக்கிற காரணத்தால், அந்தச் சிறிய சிறிய பிரச்சினைகளையேகூட by way of conciliation or consensus என்கிற வகையில் தீர்க்கப்படுவதற்கு கிராம அளவில் சிறிய அமைப்புகளை அதாவது legal binding உள்ள அமைப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் அப்படிப்பட்ட திட்டம் இப்போது பரிசீலனையில் இல்லை என்றாலும் இனிமேலாவது சட்டத்துறை அப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நீதிமன்றங்கள் 1888-ஆம் ஆண்டு சட்டப்படி தமிழகத்தில் இருந்து வந்தன. 1950-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்குட்பட்டு கிராம நீதிமன்றங்கள் மாற்றப்பட்டு அவை பஞ்சாயத்து நீதிமன்றங்களாக ஆக்கப்பட்டன. 1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்து நீதிமன்றங்களும் தமிழகத்தில் கலைக்கப்பட்டு விட்டன. அதற்கான சட்டம் திருத்தப்பட்டுவிட்டது. தற்போது மத்திய அரசு நீதிமன்றங்களில் பல்வேறு நிலைகளில் வழக்குகள் அதிகமாக நிலுவையில் நிற்கிற காரணத்தால் அதன் காரணமாகப் பொது மக்கள் சொல்லொணா இன்னல்களும் இடர்ப்பாடுகளும் அடைகிறார்கள் என்பதன் அடிப்படையில் 1888 ஆம் ஆண்டு சட்டப்படியான கிராம நீதிமன்றங்களை எல்லா மாநிலங்களிலும் எல்லா மட்டங்களிலும் கொண்டு வரலாம் என்று எண்ணி மாநில அரசுகளின் கருத்தைக் கோரியிருக்கிறது. நாமும் அதற்கு நம்முடைய இசைவைத் தந்திருக்கிறோம். மத்திய அரசு ஒட்டுமொத்தமாக முடிவெடுக்கிறபோது இந்தப் பிரச்சினை தீருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மைய அரசு விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று மாநில அரசு எதிர்பார்க்கிறது.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மாநில உயர்நீதிமன்றங்கள் ஆகியவற்றில் மிகச் சாதாரணமான வழக்குகள் தேங்கிக் கிடந்து பல ஆண்டுகளாக மக்களுக்கு நீதி வழங்க முடியாத யதார்த்தமான சூழ்நிலை இருக்கிறது. மாவட்ட நீதிமன்றங்களிலும் மாநில உயர்நீதி மன்றத்திலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் வழக்காடி விட்டு கடைசியாக அந்த

1987 மே 5]

வழக்கில் பஞ்சாயத்து செய்து கொள்கிற நிலைகூட வருகிறது. அப்படி பஞ்சாயத்து செய்து வழக்கைத் திரும்பப் பெறுகிற நிலை எத்தனையோ வழக்குகளில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சாதாரண வழக்குகளை—ஓரளவுக்கு சமரசம் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழக்குகளை—விசாரித்து முடித்துக் கொள்ள வசதியான பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இருப்பது அவசியம். எனவே இதைப்பற்றி வேகமாக உடனடி யாகப் பரிசீலனை செய்து தமிழகத்தில் இந்த முறையை நடை முறைப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it has some legal sanction. சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரத்தை உடைய கிராம நீதி மன்றங்கள் அமைப்பது என்பது பல்வேறு பிரச்சினைகளைப் போக்கும். வழக்குகளின் நிலுவையைப் போக்குவது, பொது மக்களுக்குப் பலன் தருவது, வழக்குகள் விரைவில் தீர வழி ஏற்படுவது போன்ற நன்மைகள் ஏற்படும். சாதாரண வழக்கு களுக்குக் கூட பல்லாண்டுக் காலம் காத்திருக்கக்கூடிய ஏழை களைக் காப்பதாக இருப்பதால் பல பிரச்சினைகளுக்குப் பரிகாரம் கட்டாயம் கிட்டும். ஆகவே கிராம நீதி மன்றம் என்பது இன்றியமையாத ஒன்று என்பதால் அது குறித்து மைய அரசோடு தொடர்பு கொண்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்து விரைவிலே கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்.

597—(* வினா எண் 9803) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் சடையம்பட்டி அரசு உயர் நிலைப்பள்ளி, ராயவரம் காந்தி உயர்நிலைப்பள்ளி, கடியாபட்டி அருள்மிகு பூமிநாதர் இலவச உயர்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளையும் மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?